# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 27/2022

வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி – நாள் 06–03–2025.

பெயர் = முனியசாமி வா.சா.–1

கடந்த 20–02–2025 ம் தேதி வாதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்து வாதிச்சான்றாவணம் 1 முதல் 20 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அன்றைய தினம் வழக்கறிஞர்/ஆணையரின் மாதிரி வரைபடம் மற்றும் அறிக்கை வாதி மூலம் குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது. இன்று நீதிமன்றம் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில், ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடத்தை குறியீடு செய்கிறது. வழக்கறிஞர்/ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.–1,** வரைபடம் **நீ.ம.சா.ஆ.–2** ஆகும்.

1 ம் பிரதிவாதி தரப்பில் கு.வி. –

(1) எனது வீட்டின் கதவு எண். 5/87/1 ஆகும். முருகன் எனது தம்பி. முருகனுக்கு எனது வீட்டிலிருந்து கிழக்கு பக்கமாக வீடு உள்ளது. அதன் கதவு எண். 5/87 ஆகும். எங்கள் இருவருக்கும் வடக்கு பார்த்த வாசல் வைத்த வீடு உள்ளது என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கு வடக்கே வெங்கட்ராஜ் வீடு உள்ளது. வெங்கட்ராஜ் வீடு கிழக்கு பார்த்த வாசல் கொண்டது. வெங்கட்ராஜ் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே 3 அடி சந்து உள்ளது என்றால் ஆமாம். அது இருவருக்கும் தலா 1 ½ பாத்தியப்பட்ட சந்து என்றால் சரிதான். எனது சகோதரர் முருகன் வீட்டிற்கு கிழக்கே பொது ரோடு உள்ளது. எனது சகோதரருக்கும், எனக்கும் சேர்த்து பொதுவாக வீடு கட்டப்பட்டது. மேற்படி வீடானது 2018 ல் ஆரம்பித்து 2021 ல் கிரகபிரவேசம் செய்து குடியேறிவிட்டோம்.

(2) எனக்கும், எனது சகோதரர் வீட்டிற்கும் தெற்கே 3 அடி சந்து உள்ளது. மேற்படி சந்தானது எங்களுக்கு 1 ½ அடியும், மணிகண்டன் என்பவருக்கும் 1 ½ அடியும் பாத்தியம். எங்கள் வீட்டிற்கு தெற்கே மணிகண்டன் மண் சுவர் எதுவுமில்லாமல் தகரஷெட் வைத்து வீடு வைத்துள்ளார். 1 அடி அளவு மட்டும் செங்கல் சுவர் வைத்து அதற்கு மேல் தகரத்தை வைத்து மேற்படி வீட்டை தயார் செய்துள்ளார். நான்

குடியிருக்கும் வீடானது கிழமேல் 20 அடி, தென்வடல் 20 அடி கொண்டது. எனது சகோதரன் வீடும் கிழமேல் 20 அடி, தென்வடல் 20 அடிதான். இருவரும் சேர்த்து கிழமேல் 40 அடியும், தென்வடல் 20 அடி என்றால் ஆமாம். மேற்படி 40 அடி, 20 அடி போக வடக்கும், தெற்கும் 1 ½ அடி உள்ளதா என்றால் வடக்கு பக்கத்தில் 2 ½ அடி படிக்கட்டு வைத்துள்ளேன். அதற்கு பின்பு 1 ½ அடி சந்து உள்ளது.

(3) எங்கள் வீட்டிற்கு வடக்கே வெங்கட்ராஜ் வீடு கிழமேல் எவ்வளவு அடி இருக்கும் என்றால் எங்கள் வீட்டுஅளவு இருக்கும். தெற்கு, வடக்கு 5.6 மீட்டர் இருக்கும். வெங்கட்ராஜ் வீடானது கிழக்கு பார்த்த வாசல் கொண்டது . வெங்கட்ராஜ் வீட்டிற்கு மேற்கே 1ம் பிரதிவாதி ஆனந்த் வீடு உள்ளது என்றால் ஆமாம். வெங்கட்ராஜ் வீட்டிற்கும் , 1ம் பிரதிவாதி ஆனந்த் வீட்டிற்கும்இடையே பொது சந்து உள்ளதா என்றால் இல்லை. பொதுச் சுவர்தான் உள்ளது. மேற்படி பொதுச்சுவர் தென்வடல் எவ்வளவு இருக்கும் என்றால் தெரியாது. எனது வீட்டிற்கும், 1ம் பிரதிவாதி ஆனந்த் வீட்டிற்கும் இடையே தென்வடல் பொதுச்சந்து ஒன்று உள்ளது என்றால் சந்து உள்ளது. அது எனக்கு பாத்தியமானது. மேற்படி சந்தில் 1ம் பிரதிவாதி கழிவுநீர் பைப் அமைத்துள்ளார் என்றால் ஆமாம்.

(4) எனது வீட்டிற்கு மேற்கே, 1ம் பிரதிவாதி ஒரு காம்பவுண்ட் சுவர் கடடியுள்ளார் என்றால் ஆமாாம், அது 6 அடி உயரம் கொண்டது. தாவாச் சொத்தின் தென்கிழக்குப் பகுதியில் 1ம் பிரதிவாதி ஆனந்த் ஒரு பாத்ரூம் மற்றும் கழிப்பறை கட்டியுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி பாத்ரூமில் உள்ள கழிவுநீர் எந்த பக்கம் செல்கிறது என்றால் தெற்கு பக்கம் செல்கிறது. 1ம் பிரதிவாதி தாவாச் சொத்தின் தெற்கு பக்கத்திலும், மேற்கு பக்கத்திலும் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி காம்பவுண்ட் சுவரானது வழக்கறிஞர்/ஆணையர் வரைபடத்தில் Q I , I J, J R ஆக காட்டப்பட்டுள்ளது என்றால் Q I பகுதியில் மேற்கு பக்கமாக ஒரு கேட் அமைத்துள்ளார் என்றால் ஆமாம்.

(5) 1ம் பிரதிவாதி வீடு கட்டி 10 வருடங்கள் இருக்கும். அவர் மாடியிலும் வீடு வைத்துள்ளார். அவர் மாடி கட்டியும் 10 வருடம் இருக்கும் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. மேற்படி மாடிக்கு செல்வதற்காக தாவாச் சொத்தின் வடக்கு பகுதியில் ஒரு கதவு வைத்துள்ளார் என்றால் ஆமாம். பிரதிவாதி மாடிப்படி கிழமேலாக எத்தனை அடி கட்டியுள்ளார் என்றால் 10 அடி இருக்கும். தென்வடலாக மாடிப்படி 8 அடி இருக்கும். வழக்கறிஞர்/ஆணையரிடம் நான் மேற்படி அளவுகளை சொன்னேனா என்றால் ஆமாம். வழக்கறிஞர்/ஆணையர் மேற்படி

அளவுகளை மாதிரி வரைபடத்திலோ, அறிக்கையிலோ சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆணையர் காம்பவுண்ட் தாண்டி பிரதிவாதியின் இடத்திற்கு சென்று அளக்கவில்லை. காம்பவுண்டில் உள்ள அளவுகளை வைத்தே அளந்துவிட்டார். ஆணையர் அறிக்கையில் உள்ள Q R J I பகுதிக்கு உள்ளே சென்று ஆணையர் அளவிடவில்லை என்றால் ஆமாம்.

(6) 1ம் பிரதிவாதி தாவாச் சொத்தில் தகர செட் வைத்துள்ளார் என்றால் ஆமாம். அதற்கு கிழமேல் தோராயமாக 8 அடி தென்வடல் 12 அடி இருக்கும். அதை1ம் பிரதிவாதி எந்த வகையில் பயன்படுத்தி வருகிறார் என்றால் நான் உள்ளே சென்று பார்த்ததில்லை. ஆணையர் அறிக்கையில் உள்ள I Q J R காம்பவுண்ட் சுவர் தென்வடல் 25 அடி கொண்டது. ஆணையர் அறிக்கையில் உள்ள Q R K L ஆக சொல்லப்பட்டுள்ள பகுதியும் தாவாச் சொத்துதானா என்றால் ஆமாம். அதில் 1ம் பிரதிவாதி மாடியுடன் கூடிய வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். அது சென்டிரிங் வீடுதான் என்றால் ஆமாம். மாடியும் சென்டிரிங் வீடுதான் என்றால் சரிதான். மேற்படி வீடை கட்டுவதற்கு குறைந்தது ஒரு வருடம் ஆகும் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி 10 வருடங்களுக்கு முன்பாக மேற்படி வீடை கட்டும்போது ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ள L K J I பகுதியில் உள்ள கட்டுமானங்களை கட்டிவிட்டார் என்றால் ஆமாம்.

(7) 1ம் பிரதிவாதியின் அனுபவமானது, ஆக்கிரமிப்பு என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவாச் சொத்தை சுவாதீனம் வாங்கி கொடுங்கள் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் வீடானது, ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ள L K பகுதியை தாண்டி வடக்குப் பகுதியிலும் உள்ளது என்றால் ஆமாம். L K பகுதியை தாண்டி வடக்குப் பக்கம் 1ம் பிரதிவாதிக்கு 20 அடி தூரம் வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் தாவாச் சொத்தில் 1ம் பிரதிவாதி சமையலறை அதற்கு மேல் மாடி கட்டியதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் கேட்டு தனியாக முத்திரைக் கட்டணம் செலுத்தவில்லை என்றால் ஆமாம்.

(8) நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் சாட்சியத்தின் மூலமாக 1ம் பிரதிவாதி 10 வருடங்களுக்கு முன்பாகவே தாவாச் சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்று சொல்லியுள்ளதால் காலவரையறை சட்டத்தின் கீழ் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவாச் சொத்தானது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 31/1B1A –ல் உள்ளது. பிராதில் தாவாச் சொத்தின் சர்வே எண். 31/1B1 என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சர்வே எண். 31/1B1 –ஐ இரண்டாக

உட்பிரிவு செய்துள்ளோம். அதுவானது 31/1B1A மற்றும் 31/1B1B ஆக பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண். 31/1B1A யார் சொத்து என்றால் என்னுடையது. சர்வே எண். 31/1B1B சொத்து எனது தம்பி முருகனுக்கு சொந்தமானது.

(9) ஆணையர் தாக்கல் செய்துள்ள சர்வேயர் வரைபடத்தில் 31/1B1A கிழமேல் 15.4 மீட்டராக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்கு பக்கத்தில் தென்வடல் 8.4 மீட்டராக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கிழக்கு பக்கத்தில் தென்வடல் 8.2 மீட்டராக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண். 31/1B1B கிழமேல் 13.2 மீட்டராக காட்டப்பட்டுள்ளது. மேலும்,இரு புறத்திலும் தென்வடல் 8.2 மீட்டராக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி இரு சர்வே எண்ணிற்கும் தனித்தனியாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.–2 அசல் பட்டாவானது தொலைந்துவிட்டது. அதற்காக தாலுகா அலுவலகத்தில் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.–2 பட்டாவானது எனது தகப்பனார் மூக்கன் ஏகாளி பெயரில் உள்ளது. வா.சா.ஆ..–2 ஆவணமானது எனது தகப்பனார் பெயரில் இல்லை. இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மூக்கன் என்பவர் எனது தகப்பனார் இல்லை என்றால் சரியல்ல.

(10) வா.சா.ஆ–2 ல் கிழக்குப் பகுதியில் ஒரு வீடு காட்டப்பட்டுள்ளது அது ஆதியில் இருந்ததா என்றால் ஆமாம், அது சென்ரிங் வீடா என்றால் நான் பிறக்கும்போதே சென்டிரிங் வீடாகத்தான் இருந்தது. அதற்கு முன்பு எப்படி இருந்தது என்று தெரியாது. மேற்படி வீட்டின் கதவு எண் என்னவென்றால் தெரியாது. வா.சா.ஆ.–2 எனக்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்பதால்தான் அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் அடங்கல் பதிவேட்டில் 31/1B1A ரயத்துவாரி புஞ்சை என்றும், அது மு. முனியசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண். 31/1B1B அது எனது தம்பி முருகன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் அடங்கல் பதிவேட்டில் உள்ள பட்டாவின் பெயரில்தான் உரிமை கோருகிறோம் என்றால் ஆமாம்.

(11) அ பதிவேட்டில் 18 ம் பக்கத்தில் சர்வே எண். 31/1B1, மு.மூக்கன் ஏகாலி பெயரில் பட்டா நம்பர் 511 ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். மூக்கன் பெயரில் பட்டா ஏற்பட்டதை வைத்துக்கொண்டு எனது அப்பா மூக்கையா என்ற மூக்கன் பெயரில் பட்டா ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.–3 பட்டா மாறுதல் உத்தரவு வழக்கிற்காக

மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா,.ஆ.–3 ல் பட்டாவானது எனது தம்பி முருகன் பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். அதன்பிறகு செட்டில்மெண்ட் பத்திரம் எனது பெயரில் பெற்று எனது பெயரில் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ,–4 பட்டா மாறுதல் உத்தரவில் எனது பெயருக்கு 139 சதுர மீட்டருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனது தம்பி முருகன் பெயருக்கு 111 சதுர மீட்டர்தான் பட்டா உள்ளது என்றால் ஆமாம். நாங்கள் இருவரும் சரிசமமாகதான் பாகம் பிரித்தோமா என்றால் சரிபாதியாக பிரிக்கவில்லை ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை மட்டும் என் பாகத்திற்கு பிரித்தோம். வங்கியில் லோன் வாங்க தோதாக அவ்வாறு பிரித்தோம் என்றால் இல்லை.

(12) வா.சா.ஆ.–5 எனது தகப்பனார் இறப்பு சான்றிதழில் மூக்கையா என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ–6 வாரிசு சான்றிதழில் மூக்கையா என்று மட்டும்தான் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.–7 ஆவணமானது நகல்தான் என்றால் ஆமாம். அதில் சர்வே எண். 31/1B1 250 சதுரமீட்டர் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ–8 நானும் எனது தாயார் பொன்னுத்தாயும் சேர்ந்து எனது தம்பி முருகனுக்கு செய்து கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலும் எனது தகப்பனார் பெயர் மூக்கையா என்றுதான் காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் ஒரு சென்ரிங் வீடு இருப்பதாக சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். 2018 ம் ஆண்டே வீடு இருந்துள்ளது என்றால் அது அரசால் கொடுக்கப்பட்ட பழைய வீடு. அதை இடித்துத்தான் தற்போதுபுது வீடு கட்டியுள்ளோம். புதுவீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி மற்றும் வரைபடம் வாங்கினோமா என்றால் ஆமாம்.

(13) வா.சா.ஆ.–8 பத்திரத்தில் மேற்கு மாலில் கண்டுள்ள சங்கரதாஸ் என்பவர் யாரென்றால் என்னுடைய நிலத்திற்கு மேற்கு பகுதியில் உள்ளவர். வா.சா,.ஆ.–8 ஆவணமானது வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.–9 பட்டாவானது வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.–10 ஆவணமானது நானும், எனது தாயாரும் எனது தம்பி முருகனுக்கு எழுதிக்கொடுத்த சீர்திருத்த பத்திரம் என்றால் சரிதான். எதற்காக சீர்திருத்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் ஆக்கிரமிப்பு இருந்ததால் அது குறித்து எழுதினோம். வங்கி கடன் பெறவும் எழுதினோம். மேற்படி சீர்திருத்த பத்திரத்தில் 250 சதுர மீட்டரில் பூமியில்

உள்ள அளவுப்படி கிழமேல் 43.6 அடி, தென்வடல் 27.3 அடி சதுர அடி 1190 , சதுரமீட்டர் 110.62 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி சொத்தானது எனது தம்பிக்கு பாகமாக கொடுக்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம். நானும் எனது தம்பியும் 2019 ம் வருடம் பாகம்பிரித்துக் கொண்டோம். சீர்திருத்தப்பத்திரத்திற்கு பின்புதான் பாகம் பிரித்தோம். வா.சா.ஆ.–10 ல் நமது கைவசம் உள்ள இடத்திற்கும் கிழக்கு என்று நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(14) வா.சா.ஆ.–10 ல் பட்டா படி 250 ச.மீட்டர் இருந்தபோதிலும், பூமியில் உள்ள அளவு 110.62 சதுர மீட்டர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. வா.சா.ஆ.–8 மற்றும் வா.சா.ஆ.–10 ஆவணங்களின் அசல் பத்திரத்தை வங்கியில் கொடுத்துதான் கடன் வாங்கியுள்ளோம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.–11 ஆவணமானது எனது தம்பி எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். அதில் எனது தாயார் தரப்பினராக இல்லை. மேற்படி பத்திரத்தில் நானும், எனது தாயாரும் எனதுதம்பிக்கு எழுதிக்கொடுத்த சீர்திருத்த பத்திரத்தைப்பற்றி சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்காக இந்த ஆவணமானது தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு நிலத்தை இந்த பத்திரத்தின் மூலம் மாற்றிக்கொண்டோம். மேற்படி பத்திரத்தில் கிழக்கு பக்கமாக எனது தம்பி முருகன் வீடு என்று சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். மேற்கு பக்கமாக சங்கரதாஸ் வகையறா காலியிடம் என்று சொல்லியுள்ளோம். மேற்குபக்கமாக பாண்டீஸ்வரி நிலம்என்று தான் சொல்லியுள்ளோம். பாண்டீஸ்வரி யாரென்றால் சங்கரதாஸ் வகையறாவாக இருக்கும் என நினைக்கிறேன்.

(15) வா.சா.ஆ–11 ஏற்பட்ட காலத்தில் தாவாச் சொத்தில் பிரதிவாதிகள்தான் வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி விவரத்தை வா.சா.ஆ.–11 ல் சொல்லவில்லை என்றால் ஆக்கிரமிப்பில் இருந்ததால் சொல்லவில்லை. நானும் எனது தாயாரும் எனதுதம்பிக்கு எழுதிக்கொடுத்த சீர்திருத்த பத்திரம் வா.சா.ஆ.–10 ஐ பற்றி பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.–12 ஆனது எனது பெயரில் 15–11–2019 ல் சர்வே எண். 31/1B1A பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.–16 பட்டாவானது மோசடியானது என்றால் இல்லை. வா.சா.ஆ.–17 அ பதிவேடானது மோசடியானது என்றால் இல்லை.

(16) ஆணையர் வரைபடத்தில் I J ஆக சொல்லப்பட்டுள்ள பகுதிக்கு தெற்கே 1ம் பிரதிவாதி கிழமேலாக சாக்கடை கட்டியுள்ளார் என்றால் ஆமாம். அது 3 அடி அகலம் இருக்குமா என்றால் ½ அடி அகலம்தான் இருக்கும். மேற்படி சாக்கடை வழியாகத்தான் 1ம் பிரதிவாதியின் கழிவுநீர் செல்கிறதா என்றால் ஆமாம். அதேபோல் ஆணையர் வரைபடத்தில் உள்ள I L பகுதியில் 1ம் பிரதிவாதி தென்வடலாக சாக்கடை கட்டியுள்ளார் என்றால் ஆமாம். அந்த சாக்கடை கட்டி 10 வருடத்திற்கு மேல் இருக்கும் என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்வதற்கு 6, 7 வருடத்திற்கு முன்பு இருக்கும். ஆணையர் வரைபடத்தில் M N S T ஆக சொல்லியுள்ள பகுதியை 2ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். அந்த பகுதியானது தோராயமாக தென்வடல் 5 அடி, கிழமேலாக 10 அடி இருக்கும். அதன் தொடர்ச்சியாக வடக்கு பகுதியில் 2ம் பிரதிவாதி வீடு இருக்கிறது என்றால் ஆமாம் . 1ம் பிரதிவாதி வீட்டிற்கும், 2ம்பிரதிவாதி வீட்டிற்கும் இடையே தென்வடலாக பஞ்சாயத்திலிருந்து சாக்கடை கட்டியுள்ளார்கள் என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு பகுதியில் 1ம் பிரதிவாதி சாக்கடை கட்டியுள்ளார். அதற்கு வடக்குப்பகுதியில் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து சாக்கடை கட்டியுள்ளார்கள். அவ்வாறு சாக்கடை மற்றும் கட்டிடம் கட்டியபோது நான் ஆட்சேபணை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. அவர்கள் இடத்தில்தான் கட்டினார்கள்.

(17) 1ம் பிரதிவாதி பாத்ரூம், தகரசெட் ஆகியவற்றை கட்டும்போது நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் எனது தகப்பனார் இருந்தார், அவர் ஆட்சேபனை செய்தாரா என்று எனக்குத் தெரியாது. எனது அப்பா உயிருடன் இருந்த காலம் வரைக்கும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் பகுதியைப் பொறுத்து ஆட்சேபனை எதுவும் செய்தாரா என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. 2018ம் ஆண்டிற்கு பிறகுதான் எனக்கு தெரியும். நான் எந்த வருடம் ஆட்சேபனை செய்தேன் என்றால் 2019ம் ஆண்டில் ஆட்சேபனை செய்தேன். காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவாச் சொத்தில் எனக்கும், எனது தகப்பனாருக்கும் எந்த உரிமையும், அனுபவமும் இல்லையென்றும், அதனால்தான் எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்வரை எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு வீண் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(18) 1ம் பிரதிவாதியின் தாயார், 2ம் பிரதிவாாதி என்று பிராதிலும் , வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் அப்பாவிடமிருந்து 2ம் பிரதிவாதி ஒரு பகுதி சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அப்படித்தான் சொல்லி வருகிறார்கள். தாவாச் சொத்தில் எந்தவித அனுபவமோ, பாத்தியமோ எனக்கு கிடையாது என்றால் சரியல்ல. ஆணையர் வரைபடத்தில் O P D என்ற பகுதியானது ஆக்கிரமிப்பில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது யாருடைய ஆக்கிரமிப்பில் உள்ளது என்றால் முருகேசன் மனைவி சாந்தி தட்டி வைத்து ஒரு ஷெட் அமைத்துள்ளார். அதேபோல் ஆணையர் வரைபடத்தில் A B பகுதிக்கு தெற்கே தென்வடல் 3 அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அதை மணிகண்டன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்படி மணிகண்டனையும், சாந்தியையும் நான்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் மேற்படி விஷயம் ஆணையர் அளந்தபின்புதான் எனக்குத் தெரியும்.

மறுவிசாரணை இல்லை.